## ஆண்குறியின் விறைப்பு தன்மை குறைவடைதல்



ஆண்குறியின் விறைப்பு தன்மை குறைவடைவதனால் பாலுறவில் போதிய திருப்தி ஏற்படாமல் போகலாம். இது நீரிழிவு ஏற்பட்ட ஆண்களுக்கு ஏற்படும் பொதுவான பிரச்சனையாகும். மற்றும், இது நீரிழிவு அற்ற ஆண்களுக்கும் ஏற்படுகின்றது. இதற்கு பலவகையான சிகிச்சை முறைகள் காணப்படுகின்றன, உங்கள் வைத்தியரிடம் தக்க ஆலோசனையை பெற்றிடுங்கள்.

## நீரிழிவு நோய் ஒரு பரம்பரை வியாதியா?

நீங்கள் கருத்தரிக்க திட்டமிடும் போது, உங்கள் குழந்தைக்கும் நீரிழிவு நோய் ஏற்படுமா என்ற கவலை உங்களுக்கு ஏற்படும். பெற்றோர்களுக்கோ அல்லது குடும்ப அங்கத்தவர்களுக்கோ நீரிழிவு நோய் இருப்பின் பிள்ளைகளுக்கும் அது ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. பிள்ளைக்கு நீரிழிவு நோய் உண்டாகுமா என்பதை முன்கூட்டியே அறிய எந்த வழிமுறையும் இல்லை. இது தொடர்பான மேலதிக சந்தேகங்களை உங்களது வைத்தியரிடம் கேட்டறிந்து கொள்ளுங்கள்.





# நீரிழிவு நோயும்

# பாலியல் சுகாதாரமும்

SRI LANKA DIABETES FEDERATION

SLDC

SLCE

Sri Lanka College of Endocrinologists

WORLD DIABETES FOUNDATION

SLDF SLDF SLDF SLDF

## கருத்தடை முறைகள்



நீரிழிவு நோயாளர்கள் மற்றவர்கள் போலவே கருத்தடை முறைகளை பாவிக்கலாம். கருத்தடை வில்லைகள் பாவிக்கும் போது நீரிழிவு அற்றவர்களுக்கு ஏற்படும் பக்கவிளைவுகளே உங்களுக்கும் ஏற்படுகின்றன. இரத்த குளுக்கோஸ் மட்டத்தில் சிறிய மாற்றங்கள் ஏற்படலாம்.

உங்களுக்கு சிறந்த கருத்தடை முறையை உங்கள் வைத்தியரிடம் கேட்டு தெரிந்து கொள்ளுங்கள். நீரிழிவு நோயினால் ஏற்படும் தீய தாக்கங்களை (Complication) கொண்டவர்கள் உங்களுக்கான சிறந்த கருத்தடை முறையை தெரிவு செய்யும் முன் உங்களது நீரிழிவு நோய் வைத்தியரினது ஆலோசனையைப் பெறவும். கருத்தடை முறையை மாற்றுவதற்கு உங்கள் வைத்தியரின் ஆலோசனையை பெற்றிடுங்கள். பாலியல் சம்பந்தமான நோய்களில் இருந்து பாதுகாத்துக்கொள்வதற்கு ஆணுறை பாவிப்பதே சிறந்த முறையாகும்

## குடும்ப கட்டுப்பாடு முறை

கர்ப்பம் அல்லது குழந்தை பேற்றுக்கு தயாராவதாயின் உங்கள் வைத்தியரின் ஆலோசனையை 6 முதல் 12 மாதங்களுக்கு முன்னதாக பெற்றுக்கொள்ளுங்கள். அதிக இரத்த குளுக்கோஸ் அளவு உங்கள் குழந்தையை பாதிக்கலாம். கர்ப்பமடைவதற்கு 3 மாதங்களுக்கு முன்னர் உங்கள் இரத்த குளுக்கோஸ் அளவு சரியான மட்டத்தில் பேணப்பட வேண்டும். இதற்காக உங்கள் வைத்தியரின் ஆலோசனைப்படி நீங்கள் பாவிக்கும் நீரிழிவு மருந்துகளில் மாற்றங்களை மேற்கொள்ள நேரிடலாம். எதிர்பாரா கர்ப்பம் ஏற்படின் உடனடியாக வைத்திய ஆலோசனையை நாடுங்கள்.



## கருத்தரித்தல்

நீரிழிவு நோயானது தாய்மை அடைவதை மிகவும் குறைவாகவே பாதிக்கின்றது. உங்கள் வைத்திய நிபுணரால் உங்களுக்கு Poly Cystic Ovary Syndrome என்று கண்டறியப்பட்டால் அதற்கான சிகிச்சையை பெற்றிடுங்கள்.



SLDF SLDF